பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்டி

மலர்: 15] சென்னை: தை 20 (3—2—68) சனி ★ வெளியூர்: தை 21 (4—2—68) ஞாயிறு [இதழ்: 193

பொறுத்திருந்து பார்க்கட்டும்!

பெங்களூர், பிப். 2—

"தமிழச் சட்டமன்றத்தில் இந்தியை நீக்கி இரு மொழித் திட்டத்தைச் செயல்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து மத்திய அரசு எடுத்துக்கொள்ளப் போகும் நடவடிக்கை என்ன?" என்று இங்கு செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்று ஒரே வரியில் பதிலளித்திருக்கிறார்—தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி!

'அண்ணா ஆட்சி நீடிக்க வேண்டும்'

'வரலாற்றில் கண்டறியாத மக்கள் அமைச்சரவை இது'

கொள்கையை விடாமல் மனச்சான்றுபடி நடக்கிறார்கள்

அண்ணா படத்தைத் திறந்து வைத்துப் பெரியார் புகழுரை

சென்னை, பிப். 3—

"தமிழகத்தில் எத்தனையோ அமைச்சரவைகள் ஏற்பட்டிருந்தபோதிலும்கூட, அவைகள், ஒரு கட்சி அமைச்சரவைகளாகவே இருந்தன; அமைச்சர்களும், ஒரு கட்சி அமைச்சர்களாகவே இருந்தனர்; அல்லது, அந்த அமைச்சர்கள், ஏதாவது ஓர் இலட்சியத்தில் குறிவைத்தவர்களாகவே இருந்தனர்!

"ஆனால் அண்ணா அமைச்சரவை ஒன்றுதான், 'மக்களுடைய அமைச்சரவை' என்று சொல்லப்படும் அளவுக்குச் செயல்படுகிறது; 'யாருக்கு என்ன குறை இருக்கிறது' என்பதைத் தெரிந்துகொண்டு, கூடுமான வரையில் அதைக் களையும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் அண்ணா; மக்களிடம் எளிய முறையில் பழகி—பேசி, குறைகளைக் களைய முயற்சிக்கிறார்!

"பொதுவாகச் சொல்லப்போனால்—சரித்திரச் சம்பந்தமான ஆட்சியை எடுத்துக்கொண்டாலும், இதுபோன்ற—பகுத்தறிவுவாதிகள் அமைச்சரவை நம்முடைய நாட்டில் அமைந்ததே இல்லை!

"தங்கள் கருத்துக்களைத் தைரியமாக எடுத்துச் சொல்ல அண்ணா அமைச்சரவையிலுள்ளவர்கள் தயங்குவதில்லை; அதனால், மக்களும் வருத்தப்படுவதில்லை; மக்கள் பக்குவமாக இருப்பதால், 'நம்முடைய அமைச்சரவை இது' என்றே நினைக்கிறார்கள்! தங்களுடைய கொள்கைகளை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல், மனச்சாட்சிப்படி நடப்பவர்கள்தான் இன்றையத் தமிழக அமைச்சர்கள்!

"அனைவருக்கும் திருப்திகரமாக நடந்துகொள்ள, இந்த நிலையில் எவராலும் இயலாது. என்றாலும், இயன்ற அளவுக்கு அனைவருக்கும் தேவையான காரியங்களைச் செய்து தருகிறார் அண்ணா!

"அண்ணா அவர்களின் இலட்சியமெல்லாம், 'மக்கள் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும்' என்ற கருத்திலேயே இருக்கிறது; இந்தக் கொள்கை நிலையில்தான் அவருடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது"

என்று, திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்.

நேற்று மாலை, தமிழக அரசுத் தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கத்தின் சார்பில், கோட்டையில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவுக்குக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமைவகித்தார்.

சங்கத் தலைவர் திரு. சி. வி. முனுசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசி, பெரியார் அவர்கட்கு பன்னாடுகளாலான மாலையை அணிவித்தார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசையில் குறிப்பிட்டதாவது :—

"தந்தை பெரியார் அவர்கள், இந்தக் கோட்டைக்குள் நுழைவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன்; 'அவருடைய கருத்துக்கள், இந்தக் கோட்டைக்குள் நுழைய முடியுமா' என்று ஒரு காலத்தில் நினைத்தது உண்டு; இன்று, பெரியாரின் கருத்துக்கள், இந்தக் கோட்டைக்குள்ளும் புகுந்து, டெல்லிச் செங்கோட்டையையும் கலக்கிக் கொண்டிருக்கிறது.

"இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தான் சமுதாயச் சீர்திருத்தத்தில் முன்னணியில் இருக்கிறது; இதற்குக் காரணம் பெரியார் அவர்கள்தாம்.

"1938-ம் ஆண்டு முதலே பெரியார் அவர்கள் இந்தியை எதிர்த்து வந்திருக்கிறார்கள்; அன்று அவர் மூட்டிய இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் எதிரொலிதான் இன்று தமிழகத்தில் காணப்படுவது; அந்த ஒளி விளக்குத்தான், இன்று இந்த அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறது."

பெரியார்

பெரியார் அவர்கள் மேலும் பேசுகையில் விளக்கியதாவது :—

"அண்ணா அமைச்சரவை ஆட்சிக்கு வந்தவுடனேயே சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கச் சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சியில் ஏதேனும் தவறு இருக்கிறது என்று யாராவது நினைத்தால் அவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், 'இவர்கள் செய்யும் தவறு, முன்பு ஆட்சி நடத்தியவர்கள் செய்த தவறுகளுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியதுதான்' என்று!

அண்ணாவின் ஆட்சியைச் சிலர் எதிர்க்கலாம்; ஆனால், அதற்காகப் பதவியைவிட்டு போக்கக் கூடாது; நிரந்தரமாக ஆட்சி செலுத்த வேண்டும்.

ஆட்சிக்கு இவர்கள் வந்ததும், 'ஐந்தாண்டுகள் இருந்தால் போதும்' என்றுதான் நினைத்தேன்; இப்போது போகிற போக்கைப் பார்த்தால், 'அண்ணாவின் அரசே காலா காலத்திற்கும் இருக்க வேண்டும்' என்று நினைக்கிறேன்.

அண்ணா மிகவும் கெட்டிக்காரர்; எப்படியும் சமாளிக்கக் கூடியதன்மை அவருக்குண்டு; எந்தக் காரணத்தைக் கொண்டும், பதவியை விட்டுப் போகிறேன் என்று மட்டும் சொல்லவேண்டாம்' எனக் கேட்டுக்கொள்கிறேன்."

'ஆட்சிமொழித் திருத்தச்சட்டம் அநீதியானது'

'அதனை எதிர்க்கச் சட்டமன்றத்தைக் கூட்டுக'

ஆந்திர முதல்வருக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் அவசரக் கோரிக்கை

விஜயநகரம், பிப். 2—

ஆந்திரப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் கூட்டுச் செயற்குழு அவசரமாக இன்று வால்டேரில் கூடி, ஆந்திர முதலமைச்சர், சட்டமன்றத்தின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி மத்திய அரசின் மொழிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்தின் மூலமும் அதனோடு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமும் இந்தி பேசாதவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதியையும், பாரபட்சத்தையும் நீக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வதாக உறுதிமொழி யளிக்கவும் முன்வரும் வரை, வகுப்புக்களுக்குச் செல்வதில்லை என முடிவு செய்தது.

"இத்தகைய உறுதிமொழி வழங்கப்படும்வரை ஆந்திர மக்களுக்கு மொழிப் பிரச்சினையை விளக்கவேண்டியது எங்கள் கடமையாகிறது" என்றும் அவர்கள், தங்கள் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

"ஆட்சிமொழிச் சட்டமும், அதனோடு நிறைவேற்றிய தீர்மானமும், இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு எண்ணற்ற இடர்பாடுகளை விளைவிக்கக் கூடியவையாகும். முன்னாள் தலைமையமைச்சர் களான நேருவும், லால் பகதூர் சாஸ்திரியும் அளித்த உறுதி மொழிக்கு முரணுன வையாகும்."

'ஆங்கிலம் நீடிப்பதே எங்கள் கொள்கை'

'இப்போதுள்ள நிலையை மாற்றவே கூடாது'

மே. வங்க அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 2—

"இந்தி ஏகாதிபத்தியத்தை நாங்கள் எதிர்க்கிறோம்; மேற்கு வங்காளத்தைப் பொறுத்த வரையில், 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்பதுதான் எங்கள் கொள்கை; இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலம்தான் நீடித்து இருக்க வேண்டும்; மத்தியில் இப்போதுள்ள நிலையை மாற்றக் கூடாது.

"மும்மொழித் திட்டம் சம்பந்தமாக நாங்கள் இன்னும் பரிசீலனை செய்யவில்லை"

என்று மேற்கு வங்க வர்த்தகமும் தொழில் அமைச்சர் எச். என். மகும்தார் இங்கு கூறினார்.

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு

பல்வேறு இடங்களில் மாணவர் கிளர்ச்சி

ஐதராபாத், பிப். 2—

ஆந்திரத்தின் பல்வேறு பகுதிகளிலும் இன்றும் தொடர்ந்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்திருக்கின்றன.

நீண்ட விடுமுறைக்குப்பின் நேற்று திருப்பதி கல்லூரிகள் திறக்கப்பட்டும் மாணவர்கள் வகுப்புகளுக்கு வரவில்லை.

கூட்டங்களையும் ஊர்வலங்களையும் தடை செய்யும் போலீசுச் சட்டம் 30-வது பிரிவை மேலும் 15-நாட்களுக்கு நீடித்துத் திருப்பதி போலீசு சூப்பரின்டெண்டு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அனகாபள்ளியிலும், விசாகப்பட்டினத்திலுமாக இரண்டு சரக்கு இரயில் வண்டிகளை மாணவர்கள் நிறுத்தி வைத்திருந்து பிறகு விடுவித்தனர்.

இராசமண்ட்ரியில் உள்ள ஒரு பெண்கள் பள்ளிக்குள் மாணவர் சென்று, மாணவியர்களைத் தங்களோடு வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர்; அவர்கள் அதற்கு மறுத்து விட்டதாலும், பின்னர் அந்தப் பள்ளி மூடப்பட்டதாலும் தகவல் கிடைத்துள்ளது.

மதனப்பள்ளியில் ஒரு பிரயாணிகள் இரயில் மாணவர்கள் நிறுத்தினர்; 'சிக்னல்' கம்பிகளையெல்லாம் அறுத்திருக்கின்றனர்.

மின் கழகத் தலைவர் பதவி முடியுமுன் விலகுகிறார்

சென்னை, பிப். 3—

தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் தலைவர் அப்பாதுரை, தமது பதவியை இராஜாராமன் செயலுமிட்டார் என்றும், அவரது இராஜிநாமாவுக்கான காரணங்கள் என்ன என்பது இன்னும் தெரியவில்லை என்றும் தமது பதவி விலகல் கடிதத்தைத் தமிழக முதலமைச்சர் அண்ணாவுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது என்றும் தகவல் கிடைத்துள்ளது.

முன்பே முடிவடையவிருந்த அவரது பதவிக் காலத்தை தமிழக அரசு ஓராண்டுக்கு நீடிப்புச் செய்தது; இன்னும் சில மாதங்களே அவர் பதவிக் காலம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

'படி அரிசித் திட்டம் கைவிடப்படவில்லை'

அண்ணா அறிவிப்பு

திருச்சி, பிப். 2—

"படி அரிசித் திட்டம் கைவிடப்படமாட்டாது" என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பிட்டுப்பிட்டமாக அறிவித்தார்கள்.

இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

"படி அரிசித் திட்டத்தைக் கைவிடுவதாக இல்லை; அதற்கு மாறாக, மற்ற இடங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கவே இருக்கிறோம்."

இருக்கும் வளத்தையும் பயன்படுத்த இங்கு வசதி இல்லையா?

துணிவை மட்டுமே நம்பி எவ்வளவு காலம் இருப்பது?

மீனவர்களுக்கு இயந்திர சாதனங்களின் இன்றியமையாமை—அண்ணா வலியுறுத்தல்

சென்னை, சன. 31—

"நம்முடைய மீனவர்களிடம் விஞ்ஞானக் கருவிகளோ நவீன படகுகளோ கிடையாது; சாதாரண படகுகளில் வெறும் துணிவை மட்டுமே துணையாகக் கொண்டு ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிறார்கள்; துணிவு மட்டும் இருந்து கருவிகள் இல்லாவிட்டால் என்ன பயன்? உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைக்காது.

"கடல் வளத்துக்கும் – நில வளத்துக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. நில வளத்துக்கு நாம் நெல்லைப் பயிரிட்டு உரம் போட்டு வளர்த்து அதை அறுக்க வேண்டும்; ஆனால் கடல் வளத்தில் மீன்களுக்கு நாம் உணவோ, வேறு எதுவோ போட வேண்டியதில்லை; அது, தானாக நமக்காக வளருகிறது; நமக்காக வளரும் மீன்களை நாம் எடுத்துக் கொள்வதற்கும் வசதி இல்லை; அந்த வசதியை உண்டாக்கும்விதத்தில் பிரான்சு நாடு படகுகளையும் வழங்கி, அவற்றை இயக்க நம் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க ஆட்களையும் அனுப்பியுள்ளது"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், பிரெஞ்சு நாட்டு மீன் பிடிப்பதற்கான இயந்திரப் படகுகளைப் பெற்றுக்கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியா—பிரான்சு நட்புறவுத் திட்டமான 'போரில் திட்ட'த்துக்கு விழா, சென்னைத் துறைமுகத்தில் நடந்தது; விழாவை அண்ணா தொடங்கிவைத்தார்.

விழாவில் மீன் பிடிக்கும் 2 இயந்திரப் படகுகளை முதலமைச்சர் அண்ணாவிடம் பிரான்சு நாட்டு அதிகாரி கொடுத்தார்.

அண்ணா அந்தப் படகுகளைப் பெற்றுக்கொண்டு பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இந்தியா—பிரான்சு நல்லுறவுக்காக இந்த விழா இங்கு நடைபெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் புதுவித இயந்திர மீன் பிடி படகுகளைப் பிரான்சு நாடு அளித்ததற்குத் தமிழக அரசின் சார்பிலும், மீனவர்கள் சார்பிலும் நிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய படகில் சென்றால், 'அதிருஷ்டம்' ஒன்றை மட்டுமே துணைகொண்டு, 'மீன் கிடைக்காதா' என்று ஏக்க உணர்வோடு செல்கிறோம்; ஆனால் இந்தப் படகில், மீன் இருக்கும் இடத்தை ஒரு கருவியே காட்டுகிறது!"

விழாவுக்கு திரு. அருளப்பா தலைமைதாங்கினார்.

விழா முடிந்ததுடன், அண்ணா அவர்கள், அந்தப் பாட்டைப் பார்வையிட்டு, சிறிது தூரம் படகில் சென்றார்.

திருச்சி மாவட்டம் பயிர் நிலைமை

திருச்சி, பிப். 3—

திருச்சியில் சம்பா அறுவடை விரைவாக நடைபெறுவதாகவும் இதுவரை 1,000 டன் அரிசிக்குச் சமமான தானியத்தைக் கொள்முதல் செய்திருப்பதாகவும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்திலுள்ளவர்கள் குறுவையைப் பயன்படுத்தாமல் சம்பா அரிசியையே பயனபடுத்துபவர்களாக இருப்பதால், கேரளத்திற்குக் குறுவையை அனுப்பியதைப்போல் சம்பா நெல்லை அனுப்ப இயலாது என்றும் குறுவையைப் போல் சம்பாவைக் கொள்முதல் செய்யமுடியாதென்றும் தெரிகிறது.

மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் மட்டம் குறைந்திருப்பதாலும் பருவ மழை தவறியதன் காரணமாகத் தேவையான தண்ணீர் கிடைக்காததாலும் இம்மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 3,000 ஏக்கரிலுள்ள நாஞ்சிப் பயிர்கள் பாதிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

இந்தப் பயிர் ஏறத்தாழ 50 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருக்கும் என்று விவசாயிகள் கணக்கிட்டாலும் அதிகாரத் தரப்பில் 20 சதவிகிதம்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

எனினும், 80,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்களுக்கு அதிகச் சேதம் இருக்காது என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இரஷ்ய அமைச்சருக்கு அண்ணா வாழ்க்கை வரலாறு

துணை மேயர் பவளவண்ணன் அன்பளிப்பு

சென்னை, பிப். 1—

சென்னை வந்துள்ள சோவியத் நாட்டைச் சேர்ந்த ஜார்ஜியா குடியரசின் வெளிநாட்டமைச்சர் திரு. ஹிக்கோஸ்விலிச்சு, மாநகராட்சி மன்றச் சார்பில் இன்று மேயர் ஒரு விருந்தளித்தார்; அது போது, துணை மேயர் பவளவண்ணன் அவர்கள், அண்ணாவின் வாழ்க்கை வரலாற்று நூலையும் திரு. ஏ. பி. சஞ்சீதனம் ஆங்கிலத்தில் எழுதியுள்ள அண்ணாவின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் அவருக்குப் பரிசளித்தார்.

உலகத் தமிழ் மாநாட்டு கண்காட்சி

பிப். 13 வரை நீடிக்க முடிவு

சென்னை, பிப். 3—

உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி, பல்லவக்கரசப் பரீட்சை மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்ட கலைக்கண்காட்சி பிப். 13-ம் நாள்வரை நீடிக்கும்.

சென்னையில் இந்தக் கண்காட்சியை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டுமென்று முதலமைச்சர் யோசிப்பதாகத் தெரிந்தது; அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட வருவதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தமது ஆசிரியர்களுடன் அல்லது 'மானவர்' என்ற சான்றுடன் வந்தால், நுழைவுக் கட்டணம் 25 காசு—கல்லூரி மாணவர்களுக்கு 50 காசு.

நெல்லை மாவட்டத்தில் நெற்பயிர் பாதிப்பு

நெல்லை, பிப். 3—

இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்ற 'பிஷ்னம்' என்ற வகையைச் சேர்ந்த பயிர்கள், தென்காசி—சங்கரன்கோயில்—இராதாபுரம் ஆகிய வட்டங்களில் ஏறத்தாழ கால்பாகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இங்கு ஏறத்தாழ 2,280 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள இப்பயிர் வதங்கிவிட்டதாகத் தெரிகிறது.

2,14,800 ஏக்கர் நிலத்தில் இப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

பயிர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தினால், ரூ. 3½ இலட்சம் வரி வசூல் செய்யப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்றும், தாமிரபரணி, மணிமுத்தாறு திட்டங்களின்கீழ் பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் உள்ள பயிர்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும் இம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

தஞ்சையில் தாளடிப் பயிர் பாதிப்பு

கொள்முதல் இலக்கு நிறைவேறுமா?

தஞ்சை, பிப். 3—

தஞ்சை மாவட்டத்தில் பயிரிடப்படுள்ள 8 இலட்சம் சம்பாப் பயிர்களின் அறுவடை விரைவாக நடைபெற்று வந்தாலும், வறட்சி காரணமாகக் கண்டு முதலும் குறைந்துவிடும் என்று தெரிகிறது.

இம்மாவட்டத்தில் 2.5 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்ய வேண்டியது இலக்காக இருந்தாலும், தாளடிப் பயிர் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இந்த இலக்கை அடையமுடியாது என்று தெரிகிறது.

எனினும், இம்மாவட்டத்தில் 2 இலட்சம் டன்களாவது கொள்முதல் செய்யப்படும் என்று அரசு நம்புகிறது.

இதுவரை 80,500 டன் அரிசிக்குச் சமமான நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

'ஸ்ரீ'-க்குப் பதில் சர்தார்

பஞ்சாப் முதலமைச்சர் வற்புறுத்தல்

புதுடில்லி, பிப். 3—

தமிழக அமைச்சர்கள், தங்கள் பெயர்களுக்கு முன்னால், 'ஸ்ரீ'-க்குப் பதிலாக 'திரு' என்ற அடைமொழியே பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்துவதுபோல், பஞ்சாப் முதலமைச்சர் இலட்சுமண சிங் கில், தமது பெயருக்கு முன்னால் 'சர்தார்' என்ற பெயரைச் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

இக்கோரிக்கையை அனைத்திந்திய வானொலியும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இனிமேல் சீக்கியத் தலைவர்களை குறிப்பிட்டால், 'சர்தார்' என்று அடைமொழியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

காங்கிரசு செயற்குழுவில் இடமில்லை

மூன்று மாநிலங்கள் கொதிப்பு

சண்டிகர், பிப். 3—

காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவில் தங்கள் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவருக்குக்கூட இடம் கிடைக்காதது குறித்து பஞ்சாப், அரியானா, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சியினர் பெரிதும் மனக் கசப்பு அடைந்துள்ளனர்; 'இம் மூன்று மாநிலங்களுக்கும் பொதுவாக ஒர் உறுப்பினரையாவது செயற்குழுவில் சேர்த்துகொள்ள வேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்திவருகின்றனர்.

'திட்டமிடும் பணியை நிபுணரிடம் விடுங்கள்'

'மாநிலத்துக்கு ஒரு திட்டக் குழு தேவை'

டில்லிக்கு அமைச்சர் செ. மாதவன் வலியுறுத்தல்

சென்னை, பிப். 2—

"திட்டமிடுதல், ஆராய்ச்சி ஆகியவற்றை நிபுணர்கள்தான் செய்ய வேண்டும்; அரசியல்வாதிகள் செய்யக் கூடாது.

"ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு திட்டக் குழு இருப்பது அவசியமாகும். நிபுணர்கள்கொண்ட திட்ட அரங்கு ஒன்றை அமைப்பது குறித்துத் தமிழக அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது"

என்று அமைச்சர் செ. மாதவன், தொழில்—விஞ்ஞான ஆராய்ச்சி சங்கத்தின் 'இன்டசார்ச்' இதழின் சிறப்பு மலரை வெளியிட்டு பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தொழிலாளர்களின் அதிருப்திக்கான மூல காரணங்களுக்குத் தீர்வுகண்டாலன்றி, சட்டம் —ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படாது.

தொழிலாளர்களின் கிளர்ச்சிகளைப் போலீசு உதவியுடன் சமாளிப்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது.

ஒரு தொழிற்சாலையில் ஒரு சங்கம்தான் இருக்கவேண்டும். தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளுடன் தங்களின் பிணைத்துக்கொள்ளக் கூடாது.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் நிலைமை ஏற்பட்ட அரசு அனுமதிக்காது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த அரசு, உறுதியான நடவடிக்கை எடுத்துவருகிறது."

சீக்கிய நாடு அமைக்க இரஷ்ய உதவி?

பதே சிங் செய்த முயற்சி பற்றித் தகவல்

சண்டிகர், பிப். 3—

சீக்கியர்களுக்குத் தனி நாடு பெற்றுத் தர அகாலி தளத் தலைவர் சாந்த் பதே சிங்குக்கு இரஷ்ய உதவி கிடைப்பதாக இருந்ததாகவும், பஞ்சாப் முதலமைச்சர் இலட்சுமண் சிங் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெறுங்பின் அகாலி தளத்திலிருந்து விலகாமல் பதே சிங்குடன் ஒத்துழைத்திருப்பாரேயானால் இரஷ்ய உதவியுடன் சீக்கியருக்குத் தனி நாடு அமைத்துக் கொடுப்பதில் பதே சிங் வெற்றி கண்டிருப்பாரென்றும் கூறப்படுகிறது.

சாந்த் பதே சிங் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது சீக்கியர்களுக் கென்று ஒரு தனி நாடு அமைப்பது குறித்து இரஷ்யத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிகிறது; பிறகு நிலைமை மாறிவிடவே, தனி நாடு பெறுவதற்குப் போதிய நிதி வசதியும் அரசியல் வாய்ப்பும் பதே சிங்குக்கு இல்லாமற் போயவிட்டதாம்.

இந்தத் தகவலை சாந்த் பதே சிங்கின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், 'சாந்த் பதே சிங் கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வருகிறார்; இதைப் பார்க்கையில், மதச் சார்புடன் அமைக்க அகாலி தளத்தின் அடிப்படைக் கொள்கைகளையே அவர் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது' என்று அவர்குறிப்பிட்டார்.

பஞ்சாபில், இலட்சுமண் சிங்கில் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவைக்கு எதிராக மக்கள் ஐக்கிய முனனணி ஒன்றை நிறுவுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுட்டன என்றும், இது குறித்து இரஷ்யக் கம்யூனிஸ்டுத் தலைவர்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட ஹரிகிஷன் சிங்குடனும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

சாராயக் கடை திறக்கக் காங்கிரசார் ஆதரவு!

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் மதுவிலக்கு படும்பாடு!

நாகபுரி, பிப். 3—

மகாராட்டிர மாநிலத்தில் மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு மாநிலக் காங்கிரசுக் கட்சி தனது ஒப்புதலை அளித்துவிட்டதாம்.

கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்கும் நோக்கத்தில் மகாராட்டிர அரசு, மதுவிலக்கைத் தளர்த்தி, சாராயக் கடைகளைத் திறக்க முடிவு செய்துள்ளதாம்.

கள்ளச் சாராயம் விற்பனையைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள இந்த முடிவு, எந்த அளவுக்குப் பயன்தரும் என்பது போகப் போகத்தான் தெரியும்.

"கள்ளச் சாராய விற்பனையை நிறுத்த வேண்டுமானால், மதுவிலக்கை அடியோடு கைவிட வேண்டும்" என்று மாநில காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பல உறுப்பினர்கள் வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. ஆனால் கூட்டத்தில் இதற்குப் பெருமளவான ஆதரவு கிட்டவில்லையாம்.

போதைப் பொருளான ஆல்கஹால் மிகக் குறைந்த அளவுக்குக் கலந்துள்ள சாராயக் கடைகளைத் திறப்பது குறித்து மாநில அரசு பரிசீலனை செய்துவருக்கிறது. ஆனால் கூட்டத்தில் இதற்குப் பெருமளவில் ஆதரவு கிட்டவில்லையாம்.

போதைப் பொருளான ஆல்கஹால் மிகக் குறைந்த அளவுக்குக் கலந்துள்ள சாராயக் கடைகளைத் திறப்பது குறித்து மாநில அரசு பரிசீலனை செய்துவருக்கிறது. ஆனால் கூட்டத்தில் இதற்குப் பெருமளவில் ஆதரவு கிட்டவில்லையாம்.

காஷ்மீர் அமைச்சர் கானும் ஒருமைப்பாடு!

புதுடில்லி, பிப். 3—

"தென்னக மக்களுக்கு அரிசியே முக்கிய உணவாக இருப்பது போல், காஷ்மீர் மக்களுக்கு அரிசியுடன்தான் முக்கிய உணவுப் பொருளாக உட்கொள்ளுகிறார்கள்; தென்னாட்டவர்களுக்கும் - காஷ்மீரிகளுக்குமிடையே உள்ள ஒற்றுமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்"

என்று, காஷ்மீரின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஜி. ஆர். கர் தெரிவித்தார்.

தென்னாட்டில் நடைபெறும் வேளாண்மை முறைகளைக் கண்டு காஷ்மீரில் அவற்றைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தென்னிந்தியாவுக்குச் சென்றதாகவும் அவர் கூறினார்.

துரித காலத்தில் பயனளிக்கும் நெல் வகைகளைக் காஷ்மீரில் பயிரிடப் போவதாகவும், மெக்கிரகக் கோதுமையையும் விளைவிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கம்புணரியில் அடிக்கல் நாட்டு விழாக்கள்

அமைச்சர் செ. மாதவன் பங்கேற்பு

சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தின் சோப்பு உற்பத்தி நிலையக் கட்டட அடிக்கல் நாட்டு விழா, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. எல். வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். தலைமையில் 17—1—68 காலை 10-30 மணியளவில் நடைபெற்றது.

ஒன்றியத் தலைவர் திரு. வெ. வால்மீகி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் முன்னுரைக்குப்பின் அமைச்சர் திரு. செ. மாதவன், சோப்பு உற்பத்தி நிலையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிச் சொற்பொழிவாற்றினார்.

அமைச்சர் பேசும்போது 'தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் மூலம் நடத்தப்பெறும் இச்சோப்பு உற்பத்தி நிலையம், கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கப் பெரிதும் துணைபுரியும்' என்றார்.

"பனை மரங்கள் நிறைந்துள்ள இப்பகுதியில், பனஞ் சீனி உற்பத்தி ஆலை ஒன்று நிறுவுவதற்குரிய வாய்ப்புள்ளது; அதற்குரிய தொடக்க நடவடிக்கைகளை ஒன்றியத் தலைவர் எடுத்துக்கொள்ள வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் கதர்—கிராமக் கைத்தொழில் பொருட்காட்சியை, திருமதி சரசுவதி வெங்கட்ராமன் திறந்துவைத்தார்.

குடிநீர்த் திட்டம்

சிங்கம்புணரியில் குடிநீர்த் திட்ட அடிக்கல் நாட்டு விழா, காலை 11-மணியளவில், ஒன்றியத் தலைவர் வெ. வால்மீகி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின், குடிநீர்த் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் திரு. மியாகான் அறிக்கை வாசித்தார்.

அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன், குடிநீர்த் திட்ட அடிக்கலை நாட்டிவைத்துச் சொற்பொழிவாற்றினார்.

"சிங்கம்புணரியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் மூலம் வரவேண்டும் என்பதுதான் எனது ஆசை; அதை நாம் படிப்படியாகப் பெற்றுவிடலாம்; அதற்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பும் தேவை; இவ்வகையில் ஒன்றியத்தின் தலைவரும், ஆணையரும் நல்ல ஆர்வத்துடன் செயல்படுகின்றார்கள்; அவ்வாறே நமது ஊராட்சியும் ஒத்துழைப்புத் தரவேண்டும்" என்று அமைச்சர் தமது உரையில் கூறினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் ஒன்றியத்தின் ஆணையர் திரு. மு. வீரப்பன் நன்றி கூறினார்.

மகப்பேறு விடுதி

சிங்கம்புணரியிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையில் மகப்பேறு விடுதி அடிக்கல் நாட்டு விழாவும், 'வருகாள் வளம் பெற' என்ற புதுக வெளியீட்டு விழாவும், ஒன்றியத் தலைவர் வெ. வால்மீகி தலைமையில் சுமார் 11-30 மணியளவில் நடைபெற்றது.

டாக்டர் நல்லிகா செல்லையா, வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் முன்னுரைக்குப்பின், 'வருகாள் வளம் பெற' எனும் குழந்தை வளர்ப்பின் நெறிமுறைகள் குறித்த புதுகைத்தை வெளியிட்டுப் பேசிய திருமதி சரசுவதி வெங்கட்ராமன், புதுகைத்தை ஆழ்ந்து படிக்கும் வாய்ப்பைப் பெறற்றாகவும், புதுகைத்தில் வருநாள் உலகத்தை வாழ்விக்கும் அருங் கருத்துக்கள் நிறைந்துகாணப்படுகின்றன எனவும் பாராட்டினார்.

"இப்புதுகைத்தை அனைவரும் விரும்பிப் படித்துக் குழந்தை வளர்ச்சியில் அதிக சிரத்தைகாட்டி, நாட்டின் உயர்வுக்கு வழிவகுக்க வேண்டியது அவசியம்" என வலியுறுத்தினார்.

அமைச்சர் செ. மாதவன் மருத்துவமனையின் மகப்பேறு விடுதிக் கட்டடத்தின் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

அமைச்சர் பேசும்போது, 'இம் மருத்தகம் விரைவிலேயே அரசாங்க மருத்துவமனையாக ஆகிவிடும்; அதற்கிடையில் சில சீர் திருத்தங்களை ஊராட்சி ஒன்றியம் செய்துகொடுக்க வேண்டும்' என்றார்.

விழாத் தலைவர், தமது முடிவுரையின்போது, 'அமைச்சரின் பெரும் பணியை இந்த ஒன்றியம் பயன்படுத்திக்கொள்ளத் தயங்காது' என உறுதியளித்தார்.

தொழிற் சங்க நிர்வாகிகள் தேர்தல்

மதுரை சீதாலட்சுமி ஆலை தி. ப. தொ. ஊ. சங்கக் கிளைக்கு 1968-ஆம் ஆண்டிற்குக் கீழுக் கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: மா. பெரியசுப்பன்; துணைத் தலைவர்: கணபதி; செயலாளர்: சோமு; துணைச்செயலாளர்: பரமன்; பொருளாளர்: மச்சக்காளை; மாவட்டப் பிரதிநிதிகள்: மணி, பாலுச்சாமி, மாயாண்டி, இருளப்பன்; செயற்குழு உறுப்பினர்கள்: வேலுச்சாமி, குருசாமி, பாண்டி, அச்சுனன், இராமையா, சின்னக்காளை.

மாறமதுரை வரதலட்சுமி நூற்பு ஆலையின் புதிய நிர்வாகிகள் விவரம்:—

தலைவர்: தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி; துணைத் தலைவர்: அ. இராமலிங்கம்; பொருட்செயலாளர்: எ. கே. சிவசாமி; துணைச் செயலாளர்: இ. எம். முகைய தீன்; பொருளாளர்: வி. மாயாண்டி; செயற்குழு உறுப்பினர்கள்: கணேசன், நல்லுக்கான், பொரியதம்பி, தங்கவேலு, பூரணச்சந்திரன், கழுவன், பாண்டி, ஆர். பி. இராமசாமி, நாகராசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: தூர்ச்சாமி, தங்கச்சாமி, கூடலிங்கம்.

மஞ்சூரில் வீர வணக்க கூட்டம்

மஞ்சூரில் 25—1—68 காலை 11 மணியளவில் மவுன ஊர்வலம் புறப்பட்டது; பிற்பகல் 1 மணியளவில் வீர வணக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; மோகன்தாஸ் தலைமைவகித்தார்; ஜே. பொஜன் கொடியேற்றினார்.

தோழர்கள் கே. தமிழ்ச்செல்வன், தமிழ்மணி, கலைச்செல்வன், பொஜராஜன், ஆர். மூர்த்தி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் மீதியான தொகை ரூ 130.25-ஐ, பேருந்து வண்டியில் அடிபட்டு மாண்ட மாணவர் குடும்பத்திற்கு நிதியாக அளிக்கும் பொருட்டு அண்ணா அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கல்வித் துறை பணியாளர் மாநாடு

அமைச்சர் கலந்துகொள்வார்

வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் 11—2—68 அன்று நடைபெறவிருக்கின்ற தமிழக கல்வித் துறை அலுவலகப் பணியாளர்களின் இரண்டாம் மாநில மாநாட்டில் தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு தீவிர ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

திருப்பூரில் பொதுக் கூட்டம்

என். வி. நடராசன் கலந்துகொண்டார்

திருப்பூரில் 28—1—68-ல், நகர மன்றத் தலைவர் தோழர் பழனிச்சாமி தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., கே. என். சாமிநாதன் எம்.எல்.ஏ., ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., இரா. முருகேசன், வே. சுப்பிரமணியம், நா. கந்தசாமி பி.ஏ.பி.எல். ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் திருப்பூர் மாவட்ட தலைவர் சாமிநாதன், தமிழ் மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் கொண்டுவந்து பேசினார்.

தி. மா. மு. க. பொதுக்கூட்டம்

திருப்பூரில் 29—1—68-ல், தோழர் பொன்னுதுரை தலைமையில் திராவிட மாணவர் முன்னேற்றச் சங்கச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் பொன்னையன், மாரனாசு, கந்தசாமி, பழனிசாமி பி.ஏ.பி.டி., அரங்கசாமி, முத்துராத்தினம், இரா. முருகேசன், சு. துரைராசி எம்.எல்.ஏ., கோவை மாணவர் தலைவர் துரைக்கண்ணு ஆகியோர் பேசினர்.

பல்லடம் வட்டத்தில் கொள்கைவிளக்கக் கூட்டங்கள்

பல்லடம் வட்டத்தில் 10-2-68 முதல் 15—2—68-வரை ஐந்து நாட்கள் கொமரபாளையம், அமுகி பாளையம், சின்னாண்டிபாளையம், கணக்கம்பாளையம், மேரபிரபாளையம், பள்ளபாளையம், மாரஞ்சிபாளையம், வரம்பச்சேரி, பொங்கலூர், சிங்கனூர் ஆகிய ஊர்களில் கொள்கை விளக்கக் கூட்டங்கள் நடைபெறும்.

அக்கூட்டங்களில், கோபி விவசாயச் சங்கச் செயலாளர் அத்தாணி பாபு, அவினாசி வட்டச் செயலாளர் மே. சி. தாயமணி, பல்லடம் வட்டச் செயலாளர் சேர. கு. பழனிசாமி ஆகியோர் தொழிற்சங்கச் செயலாளர் இரா. முருகேசன், மற்றும் பலரும் கலந்துகொண்டு பேசுவர்.

பசியாபுரத்தில் ஏர்முனை விழா

பசியாபுரத்தில் 15—1—68 அன்று தி. மு. கழகச் சார்பில் படிப்பகத் திறப்பு விழாவும், ஏர்முனை விழாவும் கொண்டாடப்பட்டன; தோழர் இரா. பாலு தலைமைதாங்கினார்; தோழர் ஊ. குருசாமி கொடியேற்றினார்; சிலம்பாண் சாந்தி சிங்க அடிமுறை உரிமையாளர் எம். முத்துச்சாமி, படிப்பகத்தைத் திறந்துவைத்தார்; செயலாளர் பல்லக் கிரிகலன் அன்னவாயும் வரவேற்றார்.

சென்னை 77-வது வட்ட அண்ணா நூல் நிலையம்

மேற்கண்ட நூல் நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் என். எஸ். பாரத்தசாரதி தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப் பட்டோர்:—

தலைவர்: ஜி. ரஷீத்; செயலாளர்: நா. நாயினான்; துணைச்செயலாளர்: எஸ். எம். காதர் மொய்தீன்; பொருளாளர்: கே. முகமது கவுஸ்; மற்றும் ஏழு பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

திருமண அழைப்பு

அன்புடையீர், வணக்கம்; நிகழும் பிலவங்க ஆண்டு தைத் திங்கள் 21-ஆம் நாள் (4—2—68) தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்,

எனது மகள் செல்வி: மதுரத்துக்கும்

வரதராசபுரம் திரு. பிச்சப்பிள்ளை அவர்களின் மகன் செல்வன்: பெருமாளுக்கும்

சென்னை—இராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலை, 37-எண் ஊனுள்ள 'நல்வாழ்வு' திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமணத்திற்கு, அன்பர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்,

எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.

நிகழ்ச்சி நிரல்:

3—2—68 மாலை 7 மணி: மணமகன் அழைப்பு

4—2—68 காலை 9 மணி: திருமணம்: மாலை 6 மணி: நாட்டிய நிகழ்ச்சி குமரி பத்மா சுப்பிரமணியம் எம்.ஏ. (டைரக்டர் கே. சுப்பிரமணியம் மகள்)

கிழப்பார்த்திபனூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

கீழப்பார்த்திபனூர் தி. மு. க. சார்பில் 20—1—68-ல் அண்ணாதிடலில் ஏராளமான விபரப் பொதுக் கூட்டம் திரு. எஸ். சி. இராமாநாதன் தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் தா. கிருட்டினன், சட்டமன்ற உறுப்பினர் டி. கே. சிறைமீட்டான், குடியூர் மு. சேதுராமன் ஆகியோர் பேசினர்.

பரார்த்திபனூர் கண்மாய் கல்வாய் மராமத்துச் செய்து தரும்படியும், கண்மாய்க்குத் தண்ணீர் திறந்து விடும்படியும், நியாயவிலைக் கடை தேவையென்றும் நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களிடம் மனுக்கள் கொடுக்கப்பட்டன.

திரு. நா. கிருட்டினன் எம்.பி பேசுகையில், அதிகாரிகளச் சந்தித்து வைகையில் தண்ணீர் திறந்துவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறினார்.

திரு. டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ. பேசுகையில், கால்வாய் மராமத்துச் செய்வதற்கான ஏற்பாடு செய்வதாகவும், கீழப்பார்த்திபனூரிலிருந்து குடியூர் யப்பர்பட்டிக்குச் சாலை அமைப்பதற்கான முயற்சி செய்வதாகவும் கூறினார்.

குடியூர் திரு. மு. சேதுராமன் பேசுகையில் கீழப்பார்த்திபனூரிலிருந்து குடியூர் யப்பர்பட்டிக்குச் சாலை அமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

வடக்குப்பேட்டை அண்ணா மன்றம்

சத்தியமங்கலம் வடக்குப் பேட்டை அண்ணா மன்றச் செயற்குழுக் கூட்டம், திரு. அண்ணாதாசன் தலைமையில் நடைபெற்றபோது, 5—3—68-ல் மன்ற ஆண்டு விழாவினையொட்டி விளையாட்டுப் போட்டியும், இசை நிகழ்ச்சியும் நடத்துவதெனவும், மறுநாள் சட்டப் பேரவைத் தலைவர் சி. ஏர. ஆதித்தனார் அவர்கள் அழைத்துக் கூட்டம் நடத்துவதெனவும், அதுபோது அவருக்குப் பொன்முடிப்பு பேராத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மின்கழுக் கணக்காய் சங்க மின்பாரைக் கிளை

தமிழ்நாடு மின்கழுக் கணக்காயர் சங்க மின்பாரைக் கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் 30—1—68 அன்று திரு. இரா. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம்:—

செயலாளர்: ந. அரங்கநாதன்; துணைச்செயலாளர்: டி. ஆர் நாகையன்; பொருளாளர்: எஸ். சிவகேசன்; மற்றும் ஏழு பேர் செயற்குழு உறுப்பினர்கள்; பேரவைப் பிரதிநிதிகள்: இரா. கோவிந்தசாமி, எம். டி. சண்முகம்.

பாலர் அரங்கம்

பிப். 4-ந் தேதி பிற்பகல் 2-மணி மாலை 4 மணிக்கு

'கலங்கரை விளக்கம்'

(குழந்தைகள் இறைப்பற்றச் சங்கம் நடாவிந்தது)

கட்டணம்:

சிறுவர்களுக்கு: 20 காசு

பெரியவர்களுக்கு: 40 காசு

தாய் மொழி காக்கத் தமிழக அரசு புரிந்த சாதனை

மாநிலத் தமிழாசிரியர் கழகம் பாராட்டு

மாநிலத் தமிழாசிரியர் கழகத் தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பு கணபதி பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

"உயர் பள்ளிப் பாடத் திட்டத்திலிருந்து இந்தி மொழியை அறவே விலக்கியும், தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரு மொழிக் கொள்கையை வற்புறுத்தியும் சட்டமன்றத்தில் முடிவு செய்யப்பட்டதன் மூலம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழக ஆட்சிக் குழுவினர், வரலாற்றுப் புகழ் பெற்றுவிட்டனர்.

வருகிற கல்வி ஆண்டு முதல் அரசாங்கக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்ப் பாட மொழியாக ஆக்குவதாக உறுதியளித்த தமிழக அரசினைப் பாராட்டுவதுடன், இதனைப் பின்பற்றுமாறு தனியார் கல்லூரிகளையும், அதற்கு வேண்டும் ஏற்பாடுகளைச் செய்து தருவதன் மூலம் துணைபுரியுமாறு தமிழகத்தின் பல்கலைக் கழகங்களையும் தமிழாசிரியர் கழகம் உரிமையுடன் வேண்டிக்கொள்கிறது.

உயர் பள்ளியில் இதுவரை இந்தி அல்லது சிறப்புத் தமிழுக்கென்று இருந்த பாட நேரமான இரண்டு பிரிவேளைகளைத் தமிழுக்கே தந்து உதவுமாறு கல்வி அமைச்சர் அவர்களைத் தமிழாசிரியர்கள் பணிவோடு வேண்டிக் கொள்கின்றனர்.

சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்குகொண்டு துன்ப துயரங்களுக்கு ஆளான பெருங்தலைவர்கள்—சான்றோர்கள்—துறவிகள் — தாய்மார்கள்—தொண்டர்கள் — மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் தமிழாசிரியர் கழகம் தனது ஆழந்த அன்பினையும் ஆர்ச்லையையும் தெரிவித்துக்கொள்கிறது.

இனித் தமிழக ஆட்சியைப் பொறுப்பேற்ற ஒப்படைத்த கல்விக் கூடங்களுக்கு அழைப்புவிடுத்தால் சென்று கல்வியில் தங்கள் கருத்தினை செவுக்குமாறு மாணவர்களைத் தமிழாசிரியர் கழகம் விரும்பி வேண்டிக்கொள்கிறது.

திருச்சியில் அண்ணா

மாணவர்கள் வரவேற்பு

திருச்சி, பிப். 3—

திருச்சிக்கு வரலைந்தத் முக முமைச்சர் அண்ணா அவர்களுக்கு இரவில் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

100-க்கு மேற்பட்ட கல்லூரி மாணவர்களும், விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்; அவர்கள் மலர் தூவி அண்ணா அவர்களை வரவேற்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

'இந்தித்தினிப்பே பிரிவினையை உண்டாக்கும்'

இந்தி மொழி பேசும் மாநிலங்களின் போக்கு- அண்ணா குற்றச்சாட்டு

"மொழிப் பிரச்சினையில் நான் கையாளும் முறை எந்த வகையிலும் நாட்டைப் பிளவுபடுத்த இடங்கொடுக்காது; ஆனால், இந்தித் தினியினால் முலமே நாடு பிரிந்துவிடக் கூடும் என்று கருதவேண்டிய புள்ளது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்கள்.

"இந்தி பேசும் மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தினமீது நம்பிக்கை வைத்து அதைச் செயல்படுத்தவில்லை; சில மாநிலக் கல்வி நிலையங்களில் ஆங்கிலத்தை விருப்பப் பாடமாகக் கொண்டிருக்கிறார்கள்"

என்றும் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

ஜெயப்பிரகாஷ் நாராயணனிடம் பேசியது குறித்து அண்ணா அவர்களிடம் கேட்டதற்கு, மொழிப் பிரச்சினை குறித்துத் தொடர்புடைய அனைவரிடமும் முன்னேட்டப் பேச்சு நடத்தும்படி, ஜெயப்பிரகாசரிடம் விஞேபாபாவே யோசனை தெரிவித்ததன் பேரில் ஜெயப்பிரகாசர் தம்மைச் சந்தித்ததாகவும், அவருடைய அறிக்கையின்மீது விஞேபா பாவே ஒரு வழி கண்டுபிடிக்கக்கூடும் என்றும் பதிலளித்தார்.

தாம் கூறியவற்றையெல்லாம் ஜெயப்பிரகாசர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டதாக அண்ணா அவர்கள் கூறினார்கள்; அதற்கு மேல் வேறெதுவும் கூற மறுத்து விட்டார்கள்.

மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படும்?

அண்ணா அறிவிப்பு

"சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று மாநகராட்சி மன்றம் கோரியுள்ளது குறித்து ஆராயப்படும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாநகராட்சித் தேர்தல் வருகிற கலம்பர் திங்களிலோ அதற்குப் பிறகோ நடக்கக்கூடும் என்றும் நகராட்சி மன்றங்களின் தேர்தல்களும் ஒத்திவைக்கப்படக்கூடும் என்றும் அண்ணா அவர்கள் குறிப்பாக உணர்த்தினார்கள்.

திருமணம்

சென்னை எலிகண்ட் விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்த செல்வன் ஆர். எஸ். வெங்கிராமாம்—செல்வி லலிதா; செல்வன் ஆர். லோக நாதன்—செல்வி தருணிபாய் ஆகியோர் திருமணங்கள், 4—2—68 யோர் சென்னை கோபாலபுரம் நெடுஞ்சாலை நகர், பத்மாவதி சாலை, 24-25 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

தமிழில் கல்வி கற்பதால் ஆங்கிலத் தொடர்பு அறுந்துவிடாது

மொழிப்பாடமாக ஆங்கிலம் இருந்தால் போதும்

தமிழக அரசின் மொழிக் கொள்கை— அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 2—

"ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டு, வரலாற்று நூலை—விஞ்ஞான நூலை—மற்றும் ஏனையதுறை நூல்களை தமிழிலே கொண்டுவந்து விட்டால், 'உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் இல்லாமல் என்ன செய்வது?' என்று சிலர் கேட்கிறார்கள்.

"அவர்களுக்கு கூறிக்கொள்வேன்—ஆங்கிலத்தை மொழிப் பாடமாக்கி மொழியறிவை வளர்த்துவிட்டால், மொழிப் பாடத்தில் பெற்றிருக்கும் ஆங்கில அறிவு வரலாறாக் தமிழில் படிக்க முடியும்; ஆங்கிலத்தைப் படித்துவிட்டுத் தமிழில் விளக்க வில்லையா—அதைப்போல்!

"ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும் பல்கலைக் கழகத் துணைவேந்தரே, ஐந்து ஆண்டுகளில் கல்லூரிகளில் தமிழ் பாட மொழியாகும்' என்ற திருத்தத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்றால், இது எப்படிப்பட்ட திருத்தம்—யாரால் ஏற்பட்ட திருத்தம்—என்பதை உணர வேண்டும் என்றுதான் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இது நிமிர்வாதம் பேசுகிற அரசல்ல! குற்றங்குறைகள் இருந்தால் திருத்திக்கொள்கிற அரசு! நல்லவர்களாகிய வல்லவர்கள், அவர்கள் பாதைக்கு என்றைக்கும் எங்களை இழுத்துச் செல்லலாம்!"

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், பம்பல் சம்பந்தனார் பிறந்த நாள் விழாவில் பேசுகையில் விளக்கமளித்தார்.

நாடகத் தந்தை பம்பல் சம்பந்தனாரின் 96-வது பிறந்த நாளை யொட்டியும், நடிகர் சகஸ்ரநாமம், இசை—நாடக அகாடமியின் விருது பெற இருப்பதைப் பாராட்டியும் இந்த விழா, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சார்பில் இராயப்பேட்டை திரு. வி. க. மணி மண்டபத்தில் அமைச்சர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

விழாவை கொத்தமங்கலம் சுப்புதலைமைவகித்துப் பேசினார்.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், மு. ராமபெருமாள் முதலியார், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் பேசினர்.

திரு. ம. பொ. சிவஞானம் எம் எல்.ஏ. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அமைச்சர் கருணாநிதி அவர்கள் திரு. சகஸ்ரநாமத்துக்குப் பொன்னாடை போர்த்தி, அவரது சிறந்த பணிகளையும் சீரிய இயல்புகளையும் பாராட்டிப் பேசினார்.

நாடகத் தந்தை பம்பல் சம்பந்தனார் அருகேநின்று குறித்துக் விளக்கவுரையாற்றினார்.

திரைக் காட்சியில் உலகத் தமிழ் மாநாடு

வண்ணப் படமாக வெளிவருகிறது

சென்னை, பிப். 3—

உலகத் தமிழ்மாநாட்டுத் திரைப்படம் வருகிற 23-ம் நாளன்று நாடு முழுவதும் திரையிடப்படும்.

கடந்த மாதம், சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்ததும், அதையொட்டி 23 அலங்கார வண்டிகளுடன் ஊர்வலம் நடந்ததும் தெரிந்ததே. இந்த ஊர்வலம் முழுவதும் திரைப்படமாக எடுக்கப்பட்டது. திரைப்பட ஒளிப்பதிவாளர் வின்சென்ட் தலைமையில் 10 கமிராமேன்கள் படம் எடுத்தனர்.

வண்ணத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தின் 'ஸ்ட்டு வெட்டு வேலைகள்' (எடிட்டிங்) இப்போது ஜெமினி எடிடியோவில் நடந்துவருகின்றன; விரைவில் இந்தப் படம் தயாராகிவிடும்; 23-ம் நாள் தமிழ்நாடு முழுவதும் திரையிடப்படும்.

இந்தப் படம், ஏறத்தாழ 15 மிலம் ஓடக்கூடியதாக இருக்கும்.

தமிழகச் சட்டமன்றம்

பிப். 10-ம் நாள் கூடும்

"தமிழகச் சட்டமன்றக் கூட்டம், பிப். 10-ம் நாளன்று காலை 11-மணிக்குக் கூடும்" என்று மாலை கவர்னர் உஜ்ஜல் சிங் அறிவித்துள்ளார்.

பெரிய காஞ்சி

கூட்டுறவு சங்கப் புதிய கட்டிடம்

செ. மாதவன் தலைமையில் அண்ணா திறந்துவைப்பார்

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர பாங்கியின் புதிய கட்டிடத்திறப்பு விழா, 5—2—68 மாலை 5-மணிக்கு நடைபெறும்; முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.

இந்த விழாவுக்கு கூட்டுறவு அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமைவகித்து, கருவூலக் காப்புறையைத் திறந்துவைப்பார்; திரு. ஏ. பி. கண்ணபிரான் வரவேற்புரையாற்றுவார்; திரு. மணலி இராமகிருஷ்ணன் கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைப்பார்; திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. நன்றி கூறுவார்.

அமைச்சர் மாதவன்

கடலூர் நிகழ்ச்சிகள்

பிப். 4 காலை 11 மணி: தென்னாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கிக் கட்டிடத்தில், 'கூட்டுறவு மாதச் செய்தி மடல்' முதல் இதழ் வெளியீட்டு விழா; மாலை 4-15 மணி: கடலூர் நகராட்சிமன்ற வரவேற்பு.

கலை நிகழ்ச்சி

திண்டுக்கல்

சவுந்திரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில், 4—2—68 இரவு 7-மணிக்கு பெரிய கடை வீதியில், குமாரி வீயா குழுவினரின் 'ஆளுகின்றார் அண்ணா' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

படி அரிசித் திட்டம் விரிவாக்கப்படும்

உணவமைச்சர் மதியழகன் விளக்கம்

திருச்சி, பிப். 3—

"படி அரிசித் திட்டத்தைத் தமிழக அரசு கைவிட்டு விட்டதாகச் சிலர் கேலி பேசிவருகின்றனர்; இது தவறு; எல்லா மாவட்டங்களுக்கும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துவதே தமிழக அரசின் நோக்கம்; இதற்கென்றே கொள்முதலுக்குத் தீவிரப்படுத்துமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"கொள்முதல் செய்யும் அதிகாரிகள், விவசாயிகளிடத்தில் கருமை—கண்டிப்பு காட்டாமல் ஊக்கத்துடனிருந்து அரிசி கொள்முதல் செய்ய வேண்டுமென அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

"ஓர் எக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்ய வேண்டாமெனவும் அண்ணா கேட்டுக் கொண்டிருக்கிறார்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், நேற்று திருச்சியில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டுக்குப்பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் விளக்கினார்.

உணவு உற்பத்தி—அரிசி கொள்முதல் ஆகியவைகளைத் தீவிரப்படுத்துவது பற்றி ஆலோசிக்க இம்மாநாடு நடைபெற்றது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமைதாங்கி மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

மாவட்ட கலெக்டர்களும், உணவுத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டு மே திங்கள் 31-ம் நாளுக்குள் தமிழ்நாட்டில் சம்பா அறுவடையின்போது 5-இலட்சம் டன்களுக்குக் குறையாமல் அரிசி கொள்முதல் செய்து இருப்பு வைப்பதென, மாநாடு முடிவு செய்தது.

செய்தியாளர்களிடம் உணவு அமைச்சர் மேலும் விளக்கியதாவது:—

"தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபிறகு நடைபெறும் 3-வது கலெக்டர்கள் மாநாடு இது; பொதுவாக உணவுப் பிரச்சினையைப் இன்று விவாதிக்கப்பட்டது; வருகிற சம்பா அறுவடையின்போது கொள்முதல் சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்பற்றி விவரிக்கப்பட்டது.

"தஞ்சை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களின் உபரி அரிசி முழுவதையும் கொள்முதல் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

"கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் பருவ மழை பாதிப்பதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது; இதனால் அவ்விரு மாவட்டங்களில் அரிசி விலை சற்று கூடியுள்ளது; அங்குள்ள மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்திருப்பதும் விலை உயர்வுக்குக் காரணம்.

"எனினும், தமிழகத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் அரிசி விலையைக் குறைத்திடவே தமிழக அரசு விரும்புகிறது."

மாநாட்டில் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களும் கலந்துகொண்டார்.

நடக்க இருப்பவை

4--2--68

சிவகங்கை

10-வது வட்ட தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு; தலைவர்: எஸ். கிரிநாதன் பி.ஏ.,பி.எல்.; பேசுவோர்: நன்னரிலம் அ. நடராசன், மற்றும் பலர்.

அருப்புக்கோட்டை

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பாண்டியன் திடலில்; தலைவர்: ப.பெ.ந. நல்லமுமு; பேசுவோர்: ஆ. தீராவிடமணி, சிவ. சண்முகசுந்தரனார், இர. சின்னச்சாமி.

5--2--68

திருத்துறைப்பூண்டி

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு தெற்கு வீதியில்; தலைவர்: டி.எஸ். கல்யாணசுந்தரம்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., மன்னை ப. நாராயணசாமி, ந. தருமலிங்கம், வை. சுப்பிரமணியம், கு. சண்முகம், த. சோமசுந்தரம்.

பு. புளியம்பட்டி

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு காமராசியாம் மன் கோயில் திடலில்; தலைவர்: பி.வி. கொண்டசாமி; பேசுவோர்: பி.ஏ. சாமிநாதன் எம்.பி., வ.க. இராமராசன் எம்.எல்.ஏ., க. அன்பரசு, மோசி. தூயமணி, பி.எஸ். சீதாராமன், பு.கா. ஆறுமுகம், டி. முனுசாமி, அர.சு. மணி.

6--2--68

வந்தவாசி

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு காஞ்சிபுரம் ரோடு அண்ணா திடலில்; தலைவர்: எம். கே. இரகீம்; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துசாமி, கோ. விசுவநாதன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். முத்துலிங்கம், வி.டி. அண்ணாமலை, வி. முனுசாமி, பற்றாம் தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ., எஸ்.கே. சேசாத், கே.எம். அசன் பி.காம்., பி.எல்., கே.எம்.ஏ. அப்துல். (இரவு 10 மணிக்கு ஆர். வேணுகோபால் தலைமையில் 'உதய சூரியன்' கொள்கை விளக்க நாடகம் நடைபெறும்).

முத்துப்பேட்டை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு இரயில்வே திடலில்; தலைவர்: க. கருப்பையன்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம். எல்.ஏ., ந. தருமலிங்கம் எம். எல்.ஏ., இரா. நடராசன், ப. நாகரெத்தினம், மற்றும் பலர்.

அந்தியூர்

4, 5-வது வார்டு தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: டி. எம். பழனியப்பன்; பேசுவோர்: ஜி. என். இராசு, எஸ். ஏ. இராமமணிக்கம் எம்.சி., ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ., செ. அரங்கநாயகம் எம்.ஏ.,பி.டி., எம்.எல்.ஏ., கே. சி. காளிமுத்து, ஏ. ஆர். கோவிந்தசாமி, மற்றும் பலர்.

தாமரைக்கரை

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: சி. செயராமன்; கொடி பேற்றுபவர்: டி. பி. சாம்ராஜ்; வரவேற்பு இதழ் வாசிப்பவர்: பொ. பத்சே கவுடர்; வரவேற்புரை: பு. பொமாநாத்தம்பிடி; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ., ஜி. பி. வெங்கடு எம்.சி., அ. வெற்றிவேல், மற்றும் பலர்.

இராயிட முள்ளேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆதிநாராகவும், வெளியீடுவராகவும், அதிகாரவாரகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஆதிநாராயண செட்டித் தெரு, சென்னை.11) அச்சிடு வெளியிடப்படுகிறது.